# சிறப்புக் கூட்டத்தொடரில் வரலாற்று முடிவுகள்

**புது தில்லி, செப். 18:** நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடரில் வரலாற்றுச் சிறப்புமிக்க முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தொடர் திங்கள்கிழமை தொடங்கியது. முதல் நாள் அமர்வு பழைய நாடாளுமன்றக் கட்டடத்தில் தொடங்கிய நிலையில், கூட்டத்தொடருக்கு முன்பு நாடாளுமன்றத்துக்கு வெளியே ஊடகங்களிடம் பேசிய பிரதமர் மோடி கூறியதாவது:

இந்தச் சிறப்புக் கூட்டத்தொடர் சில நாள்களுக்கு மட்டும் நடைபெறும் என்றாலும், இதில் பெரிய அளவிலான வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவுகள் எடுக்கப்பட உள்ளன. 75 ஆண்டு கால நாடாளுமன்றப் பயணம் நம்மை புதிய இடத்துக்குக் கொண்டு வந்துள்ளது. ஆகையால், எம்.பி.க்கள் புத்துணர்வுடன் இந்தக் கூட்டத்தொடரில் பங்கேற்க வேண்டும்.

சந்திரயான்-3, ஜி20 மாநாடு, விஸ்வகர்மா திட்டம், யசோபூமி மையம் தொடக்கம் ஆகியவை நாட்டு மக்களைப் பெருமையடையச் செய்துள்ளது. 2047-ஆம் ஆண்டுக்குள் இந்தியா வளர்ச்சியடைந்த நாடாக வேண்டும். புதிய முடிவுகள் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் எடுக்கப்படும். இந்தியாவின் வளர்ச்சியில் எந்தவிதத் தடைகளும் இல்லை என்பதால் கனவுகள் அனைத்தும் நனவாகும்' என்றார் அவர்.

**இன்று புதிய நாடாளுமன்றத்தில்...:** சிறப்புக் கூட்டத்தொடரின் 2-ஆம் நாள் நிகழ்வுகள் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன. புதிய கட்டடத்தில் நடைபெறும் முதல் கூட்டத்தொடராக இது அமைந்துள்ளது.

## பிரதமர் நரேந்திர மோடி



நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடரின் முதல் நாளான திங்கள்கிழமை மக்களவையில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி.

தில்லியில் பழைய நாடாளுமன்றக் கட்டடத்துக்கு அருகே புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. அதைப் பிரதமர் நரேந்திர மோடி கடந்த மே 28-ஆம் தேதி திறந்து வைத்தார்.

நாடாளுமன்றத்தின் 5 நாள் சிறப்புக் கூட்டத்தொடர் பழைய நாடாளுமன்றக் கட்டடத்தில் தொடங்கிய நிலையில், 2-ஆம் நாள் நிகழ்வுகள் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. வட மாநிலங்களில் விநாயகர் சதுர்த்தி செவ்வாய்க்கிழமை கொண்டாடப்படவுள்ள நிலையில், புதிய நாடாளுமன்றத்தில் முதலாவது கூட்டத்தொடரும் அதே நாளில் தொடங்கவுள்ளது.

புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் மக்களவை அமர்வு செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.15 மணிக்கும், மாநிலங்களவை அமர்வு பிற்பகல் 2.15 மணிக்கும் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**மைய மண்டபத்தில்...** முன்னதாக, நாட்டின் வளமான நாடாளுமன்ற பாரம்பரியத்தை நினைவுகூர்வதோடு, 2047-ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றுவதற்கு உறுதியேற்கும் நிகழ்ச்சி, நாடாளுமன்ற பழைய கட்டடத்தின் மைய மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சிக்கு மாநிலங்களவைத் தலைவர் ஜகதீப் தன்கர், பிரதமர் நரேந்திர மோடி, மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா ஆகியோர் தலைமை தாங்கவுள்ளனர்.

நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி, மாநிலங்களவை பாஜக குழு தலைவர் பியூஷ் கோயல், மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை காங்கிரஸ் குழு தலைவர் அதீர் ரஞ்சன் செளதரி மற்றும் மூத்த எம்.பி.க்கள் நிகழ்ச்சியில் உரையாற்றவுள்ளனர்.

மக்களவையின் மூத்த எம்.பி. மேனகா காந்தி, மாநிலங்களவையின் மூத்த எம்.பி.யும் முன்னாள் பிரதமருமான மன்மோகன் சிங், மூத்த எம்.பி. சிபு சோரன் உள்ளிட்டோர் உரை நிகழ்த்துவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சுமார் ஒன்றரை மணி நேரம் நடைபெறும் இந்நிகழ்ச்சி, தேசிய கீதத்துடன் நிறைவடையும். பின்னர், தலைவர்களின் வழிநடத்துதலில் அனைத்து எம்.பி.க்களும் புதிய நாடாளுமன்றக் கட்டடத்துக்குச் செல்வர். மைய மண்டப நிகழ்ச்சிக்கு முன்பாக, எம்.பி.க்கள் குழு புகைப்படம் எடுக்கும் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

**சிறப்புமிக்க தருணம்:** நாடாளுமன்றத்தின் 75 ஆண்டு கால வரலாறு குறித்து பழைய நாடாளுமன்றக் கட்டடத்தில் திங்கள்கிழமை விவாதிக்கப்பட்டது.

அது தொடர்பாக மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா கூறுகையில், 'பழைய நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற கடைசி அமர்வில் ஆக்கபூர்வ விவாதம் நடைபெற்றது.

பிரதமரும், அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் தங்கள் கருத்துகளைச் சிறப்பாக எடுத்துரைத்தனர். இனி நாடாளுமன்றக் கூட்டத்தொடர் அமர்வுகள் அனைத்தும் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெறும்.

இது வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம். புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் நாம் புதிய மைல்கல்லை அடைவோம் என நம்புகிறேன். அதே வேளையில், முன்பு போல திட்டமிட்டு அமளியில் ஈடுபடும் நடவடிக்கைகளை எதிர்க்கட்சிகள் முன்னெடுக்கக் கூடாது. ஜனநாயக மாண்புகளைக் காக்கும் வகையில் அனைவரும் நடந்து கொள்ள வேண்டும். புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் விவாதங்களும் சிறப்புடன் முன்னெடுத்துச் செல்லப்படும் என நம்புகிறேன்' என்றார்.

**மத்திய அமைச்சரவைக் கூட்டம்:** நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடரின் முதல் நாள் அமர்வு நிறைவடைந்த பின்னர் மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. சிறப்புக் கூட்டத்தொடரில் எடுக்க வேண்டிய முக்கிய முடிவுகள் குறித்து இதில் ஆலோசிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## 'நாடாளுமன்றம் மீதான நம்பிக்கை அதிகரிப்பு'

**புது தில்லி, செப். 18:** நாடாளுமன்றம் மீதான நம்பிக்கையை மக்களிடம் அதிகரிக்கச் செய்ததே பழைய நாடாளுமன்றம் கடந்த 75 ஆண்டுகளில் செய்த மிகப்பெரிய சாதனை என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடரின் முதல் நாளான திங்கள்கிழமை பழைய நாடாளுமன்றக் கட்டடத்துக்குப் பிரியாவிடை அளிக்கும் வகையில், கடந்த 75 ஆண்டுகளில் நாடாளுமன்றம் கடந்து வந்த பாதைகள் குறித்த விவாதம் நடைபெற்றது.

அந்த விவாதத்தைத் தொடங்கி வைத்து பிரதமர் மோடி பேசியதாவது: பழைய நாடாளுமன்றக் கட்டடத்துக்குப் பிரியாவிடை அளிப்பது உணர்வுபூர்வமான தருணம். இந்தக் கட்டடத்தைவிட்டுப் பிரிகையில் நம் மனது பல்வேறு உணர்வுகளுடனும் நினைவுகளுடனும் நிறைந்துள்ளது.

நாட்டின் சுதந்திரப் போராட்டக் காலத்தில் பகத் சிங், படுகேஷ்வர் தத் ஆகியோர் இதே கட்டடத்தின் மீதே வெடிகுண்டுகளை வீசினர். அவர்களின் செயல் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஆணிவேரையே அசைத்தது.

நாடு சுதந்திரமடைந்தபோது முதல் பிரதமர் ஜவாஹர்லால் நேரு இதே கட்டடத்தில்தான் வரலாற்றுச் சிறப்புமிக்க உரையை நிகழ்த்தினார். அந்த உரையானது தற்போதைய தலைமுறைக்கும் தொடர்ந்து ஊக்கமளித்து வருகிறது.

'அரசுகள் வரும், போகும்; கட்சிகள் உருவாகலாம், பிளவுபடலாம். ஆனால், இந்த நாடு தொடர்ந்து சிறப்படைய வேண்டும்' என அடல் பிஹாரி வாஜ்பாய் இதே கட்டடத்தில்தான் கூறினார். அவரது கருத்து தற்போதும் எதிரொலித்து வருகிறது.

**தொடர்ந்து வீறுநடை:** நாடாளுமன்றத்தின் மீதான மக்களின் நம்பிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த 75 ஆண்டுகளில் பழைய நாடாளுமன்றக் கட்டடம் புரிந்த மிகப் பெரிய சாதனை அதுவே. நாம் புதிய நாடாளுமன்றக் கட்டடத்துக்குச் சென்றால்கூட, இந்தப் பழைய நாடாளுமன்றக் கட்டடமானது எதிர்காலத் தலைமுறையினருக்கும் தொடர்ந்து ஊக்கமளித்துக் கொண்டே இருக்கும்.

நாடு சுதந்திரமடைந்தபோது, பல்வேறு கேள்விகள் இந்தியாவின் மீது தொடுக்கப்பட்டன. எதிர்மறை கருத்துகளை இந்த நாடாளுமன்றத்தின் வலிமை பொய்யாக்கியது.

பல்வேறு சவால்களுக்கும் ஐயங்களுக்கும் மத்தியில் இந்தியா தொடர்ந்து வீறுநடை போட்டு வருகிறது என்றார் பிரதமர் மோடி.

**பண்டித நேரு முதல் வாஜ்பாய் வரை... பிரதமர் மோடி புகழாரம்**

செய்தி உள்ளே

EVA STALIN

# கல்வித் தகுதி கட்டாயம்?

இரா. சாந்தகுமார்

தில்லியில் ஆன்லைன் மூலமாக கல்வி கற்பிக்கும் தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்த ஆசிரியர் ஒருவர், தன் மாணவர்களிடம், தேர்தலில் படித்த வேட்பாளர்களுக்கு வாக்களிக்கும்படி கூறியுள்ளார். ஆசிரியரின் செயல் தங்கள் நிறுவனத்தின் நன்னடத்தை விதிகளுக்குப் புறம்பானது எனக் கூறி கல்வி நிறுவனம் அவரை பணிநீக்கம் செய்திருக்கிறது. ஆசிரியரோ, தான் அவ்வாறு கூறவில்லை என்று தற்போது மறுத்துள்ளதோடு, சிலர் தந்த அழுத்தம் காரணமாகவே தான் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

இதனிடையே தில்லி மாநில முதல்வர் அரவிந்த் கேஜரிவால், 'படித்த வேட்பாளர்களுக்கு வாக்களிக்கும்படி அந்த ஆசிரியர் கூறியிருந்தால், அதில் தவறு இல்லை' என்று கருத்து தெரிவித்துள்ளார்.

கிராம பஞ்சாயத்து தொடங்கி, குடியரசுத் தலைவர் பதவி வரை வேட்பாளராக நிறுத்தப்படுகிறவர் குறிப்பிட்ட கல்வித் தகுதி பெற்றிருக்க வேண்டும் என நமது நாட்டின் அரசியல் சாசனத்தில் குறிப்பிடப்படவில்லை. இதற்குக் காரணம், அரசியலமைப்பை அண்ணல் அம்பேத்கர் தலைமையிலான குழுவினர் உருவாக்கிய காலகட்டத்தில், நம் நாட்டில் சுமார் 10% மக்களே கல்வியறிவு பெற்றிருந்தனர். இதனைக் கருத்தில் கொண்டு கல்வித் தகுதி இல்லாததால் ஒருவர் மக்கள் தொண்டாற்றுவதற்கான வாய்ப்பு மறுக்கப்படக்கூடாது என்பதற்காக கல்வித் தகுதி எதையும் நம் அரசியல் சாசனத்தில் நிர்ணயிக்கவில்லை.

எனினும், அரசியல் நிர்ணய சபையில் அண்ணல் அம்பேத்கர் உரையாற்றிய போது, 'நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கான தேர்தலில் போட்டியிடுவோர் கல்வித் தகுதி பெற்றிருக்க வேண்டியது அவசியம் என அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் கருதினால், அவர்களின் விருப்பப்படி கல்வித் தகுதியை நிர்ணயிக்கலாம்' என்ற ஆலோசனையை அளித்தார்.

2011-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, நம் நாட்டில் கல்வியறிவு உடையோர் 73%. இந்த எண்ணிக்கை தற்போது மேலும் அதிகரித்து இருக்கும். இந்நிலையில், மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தில் உரிய திருத்தங்களைக் கொண்டு வந்து தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கு குறைந்தபட்ச கல்வி தகுதியை நிர்ணயிப்பதில் தவறில்லை.

தற்போது நம் நாடாளுமன்றத்தின் மக்களவையில் உள்ள உறுப்பினர்களில் 72.5% உறுப்பினர்கள் கல்லூரிப் படிப்பை முடித்த பட்டதாரிகள். 23.5% உறுப்பினர்கள் பள்ளிப்படிப்பை முடித்தவர்கள். மீதமுள்ள நான்கு சதவீத உறுப்பினர்கள் கற்ற கல்வி பற்றி விவரம் கிடைக்கவில்லை என்றபோதிலும் இவர்களும் குறைந்தபட்சம் பள்ளிப் படிப்பையாவது முடித்தவர்களாகவே இருக்கக்கூடும்.

மாநிலங்களின் சட்டப்பேரவை உறுப்பினர்களைப் பொறுத்தவரை, பெரும்பாலான உறுப்பினர்கள் பட்டதாரிகளாகவே உள்ளனர். அதிகபட்சமாக ஹிமாச்சல பிரதேச சட்டப்பேரவை உறுப்பினர்களில் 76.5 % பேர் பட்டதாரிகள் ஆவர். பொதுவாக, சட்டப்பேரவைகளுக்கு கல்லூரி படிப்பை முடித்தவர்கள் உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்படுவது ஒவ்வொரு தேர்தலிலும் அதிகரித்தபடியே உள்ளது. உதாரணமாக, உத்தர பிரதேச மாநில சட்டப்பேரவைக்கு 2007-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் 61% பேர் கல்லூரிப் படிப்பை முடித்தவர்களாக இருந்தனர். இந்த எண்ணிக்கை 2022-ஆம் ஆண்டு தேர்தலின்போது 77% ஆக உயர்ந்தது.

தற்போது நாடாளுமன்ற மக்களவை, மாநில சட்டப்பேரவைகளுக்கு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படுபவர்களில் பலர் வழக்குரைஞர், மருத்துவர், பொறியியல் பட்டதாரி என மெத்தப் படித்தவர்களாக உள்ளனர். ஆக கல்லூரிப் படிப்பை முடிக்காத மக்கள் பிரதிநிதிகள் எண்ணிக்கை என்பது தற்காலத்தில் மிக மிக சொற்பமே.

மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் குறைந்தபட்ச கல்வி தகுதி இருக்கும் பட்சத்தில், அவர்கள் மக்களின் பிரச்னைகளை எளிதில் புரிந்து கொள்வர். அதோடு சம்பந்தப்பட்ட மன்றங்களில் முழுமையான புரிதலோடு மக்கள் பிரச்னைகளை முன்வைப்பத்தோடு, அப்பிரச்னைகளுக்கு சரியான தீர்வு காணவும் அவர்களின் கல்வித் தகுதி உதவும். போதிய கல்வியறிவு இல்லாமல் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகள் பெரும்பாலான தருணங்களில் முழுக்க முழுக்க தமக்கு கீழ் பணிபுரியும் அதிகாரிகளையே சார்ந்து இருக்க நேரிடும்.

இத்தகைய மக்கள் பிரதிநிதிகள் சில சமயங்களில் அதிகாரிகளின் தவறான வழிகாட்டுதல்களுக்கு உள்ளாகலாம். மேலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் ஆட்சி என்பது, அதிகாரிகளின் ஆட்சி என்ற நிலைமைக்கு மாறும் அபாயம் உள்ளது. இது மக்களாட்சி தத்துவத்தையே கேள்விக்குறியாக்கிவிடும்.

மக்கள் பிரதிநிதிகள் வகிக்கும் அரசு உயர் பதவிகளுக்கு ஏற்ப அப்பிரதிநிதிகள் உரிய கல்வித் தகுதியும் பெற்றிருக்க வேண்டும் என்ற கருத்து கடந்த காலங்களில் விவாதிக்கப்பட்ட போது, அந்நிலைப்பாட்டினை வரவேற்ற உயர் பொறுப்பு வகித்தவர்களில் நம் நாட்டின் முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையராகப் பணியாற்றிய எஸ். ஒய். குரேஷியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசின் கடைநிலைப் பணியாளர்களாக பணிபுரிவோர்க்கு கூட குறிப்பிட்ட கல்வித் தகுதி நிர்ணயிக்கப்படும் இக்காலகட்டத்தில், அரசு நிர்வாகத்தில் உயர் பதவிகளை வகிக்கக் கூடிய மக்கள் பிரதிநிதிகளுக்கும் குறைந்தபட்ச கல்வி தகுதி நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

கல்வித் தகுதி உடையவர் மட்டுமே அரசியலில் பங்கேற்க இயலும் என்ற நிலைமை ஏற்படின் பள்ளி, கல்லூரிகளில் சேர்வோர் எண்ணிக்கை அதிகரிக்கும். பள்ளி இடைநிற்றல் எண்ணிக்கையும் பெருமளவு குறையும்.

அரசியலில் ஈடுபடுவோர் கல்வித் தகுதி உள்ளவராக இருப்பின் அது நாட்டின் நிர்வாகத் திறனுக்கு கூடுதல் பல மூட்டுவதாகவே இருக்கும். எனவே மக்களவை மற்றும் சட்டப்பேரவைக்கான தேர்தலில் போட்டியிடுவோருக்கான கல்வித் தகுதியை நிர்ணயம் செய்தல் அவசியமே.

# பண்டித நேரு முதல் வாஜ்பாய் வரை...

**புது தில்லி, செப். 18:** நாட்டின் வளர்ச்சிக்கான கொள்கைகளை இந்த நாடாளுமன்றக் கட்டடத்தில் வெளியிட்ட பண்டித ஜவாஹர்லால் நேரு முதல் வாஜ்பாய் வரையிலான அனைத்துத் தலைவர்களும் இந்தத் தருணத்தில் பாராட்டப்பட வேண்டியவர்கள்; தங்களது தலைமையில் நாட்டைப் புதிய பாதையில் அவர்கள் வழிநடத்தினர் என பிரதமர் மோடி புகழாரம் சூட்டினார்.

நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத் தொடரின் முதல் நாளான திங்கள்கிழமை மக்களவையில் பிரதமர் மோடி மேலும் பேசியதாவது:

நாடாளுமன்றத்தின் செயல்பாடுகளை வலுப்படுத்தியதில் சர்தார் வல்லபபாய் படேல், சந்திரசேகர், எல்.கே.அத்வானி உள்ளிட்டோர் முக்கியப் பங்கு வகித்தனர். அவர்களது சாதனைகளைக் கொண்டாடும் தருணமாக இது அமைந்துள்ளது.

இதே நாடாளுமன்றக் கட்டடத்தின் மீதுதான் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். அத்தாக்குதல் வெறும் கட்டடத்தின் மீதான தாக்குதல் மட்டுமல்ல. ஜனநாயகத்தின் தாய் மீதே அந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. அத்தாக்குதலின் போது, நாடாளுமன்ற உறுப்பினர்களைக் காப்பதற்காகப் பலர் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்தனர். இந்தத் தருணத்தில் அவர்களுக்குத் தலைவணங்குகிறேன்.

**அம்பேத்கரின் பங்களிப்பு:** நாட்டைக் கட்டமைத்ததில் பி.ஆர்.அம்பேத்கருக்கு முக்கியப் பங்குள்ளது. தொழில்மயம் குறித்த அவரது பார்வை சிறப்புமிக்கது. நாடு சுதந்திரமடைந்தவுடன் சமூக நீதியை நிலைநாட்டுவதற்கு அவர் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவரது தொழில்மயம் சார்ந்த சிந்தனைகள் தற்போதைய அனைத்துக் கொள்கைகளுக்கும் வழிகாட்டியாக இருந்து வருகின்றன.

பிரதமராக இருந்தபோதே நேரு, லால் பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தி ஆகியோரை இந்த நாடு இழந்தது. அவர்களுக்கு நாடாளுமன்றத்தில் பெரும் மரியாதை அளிக்கப்பட்டது. இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது, வங்கதேசத்தின் விடுதலைக்கு இந்தியா ஆதரவளித்தது. அதே வேளையில், அவசரநிலை காலத்தில் நாட்டின் ஜனநாயகத்தின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

**தனித்துவமிக்க பங்களிப்பு:** ராஜேந்திர பிரசாத் முதல் ஏ.பி.ஜே. அப்துல் கலாம், ராம்நாத் கோவிந்த் வரையிலும், தற்போதைய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவும் இந்த நாடாளுமன்றக் கட்டடத்தில் சிறப்புமிக்க உரைகளை ஆற்றியுள்ளனர். ஜி.வி.மவ்லாங்கர் தொடங்கி சுமித்ரா மகாஜன், ஓம் பிர்லா வரை அனைத்து மக்களவைத் தலைவர்களும் அவையைத் திறம்பட வழிநடத்தியுள்ளனர். ஒவ்வொருவரும் தங்களின் பங்களிப்பைத் தனித்துவமிக்க வகையில் வழங்கினர்.

குறிப்பிட்ட இடத்தை சிறப்பானதாக மாற்றும் சக்தி ஓசைக்கு உள்ளது. நாடாளுமன்றத்தின் 7,500 பிரதிநிதிகளின் ஓசையானது இந்த இடத்தை சிறப்புமிக்கதாக மாற்றியுள்ளது. இன்னும் 50 ஆண்டுகள் கழித்து, ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட நபர் இந்த இடத்தைப் பார்வையிட்டால், இந்திய நாடித்துடிப்பின் ஓசையை அவரால் கேட்க முடியும்.

**புதிய நம்பிக்கையுடன்...:** இந்தக் கட்டடத்தை எதிர்காலத்துக்கான நம்பிக்கைக்காக விட்டுச் செல்கிறோம். புதிய நம்பிக்கையுடன் புதிய நாடாளுமன்றக் கட்டடத்துக்குள் நுழைவோம் என்றார் பிரதமர் மோடி.

தனது உரையின்போது நாடாளுமன்றத்தின் மூத்த, இளம், நீண்டகால உறுப்பினர்களைப் பிரதமர் மோடி பட்டியலிட்டார்.

மிக அதிக வயது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பெருமை சமாஜவாதி கட்சியைச் சேர்ந்த ஷஃபிகர் ரகுமான் பார்கை (93) சேரும் என அவர் கூறினார். மிக இளவயது நாடாளுமன்ற உறுப்பினர் என்ற சிறப்பு பிஜு ஜனதா தளம் கட்சியைச் சேர்ந்த சந்திராணி முர்முவை (30) சேரும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் இந்திரஜித் குப்தா சுமார் 36 ஆண்டுகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்ததையும் அவர் சுட்டிக் காட்டினார்.

**நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி புகழாரம்**



நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடருக்கு முன்னதாக செய்தியாளர்களைச் சந்தித்த பிரதமர் நரேந்திர மோடி.

# நாட்டின் சைபர் குற்றங்களில் 75% நிதி மோசடிகள்

## ஐஐடி ஆய்வுத் தகவல்



**நொய்டா, செப். 18:** நாட்டில் கடந்த மூன்றரை ஆண்டுகளில் நடைபெற்ற இணையவழி (சைபர்) குற்றங்களில் நிதி மோசடிகள் 77.41 சதவீதம் பங்கு வகிப்பதாக கான்பூர் ஐஐடி நடத்திய ஆய்வு முடிவில் தகவல் வெளியாகியுள்ளது.

நாட்டில் கடந்த 2020-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் கடந்த ஜூன் மாதம் வரை மூன்றரை ஆண்டுகளில் நடைபெற்ற இணையவழி குற்றங்கள் தொடர்பாக கான்பூர் ஐஐடி நிர்வகிக்கும் லாப நோக்கமில்லாத ஸ்டார்ட்-அப் நிறுவனமான 'ஃபியூச்சர் கிரைம் ரிசர்ச் ஃபவுண்டேஷன் (எஃப்சிஆர்எஃப்)' ஆய்வு மேற்கொண்டது. அதன் முடிவுகளை 'இந்தியாவைப் பாதிக்கும் இணையவழி குற்றங்கள்' என்னும் தலைப்பில் ஐஐடி கான்பூர் அண்மையில் வெளியிட்டது.

ஆய்வு மேற்கொண்ட காலகட்டத்தில் இந்தியாவில் நடைபெற்ற இணையவழி குற்றங்களில் நிதி மோசடிகள் 77.41 சதவீதம் பங்கு வகிக்கின்றன. இதில் யுபிஐ, இணையவழி வங்கிச் சேவை உள்ளிட்டவை தொடர்பாக மட்டும் 47.25 சதவீத குற்றங்கள் நடந்துள்ளன. சமூக ஊடகங்கள் தொடர்பான குற்றங்கள் 12.02 சதவீதமும், இணையவழி சூதாட்டம், இணையவழி பயங்கரவாதம், இணையவழி பணம் உள்ளிட்ட மற்ற குறிப்பிடத்தக்க வகை குற்றங்கள் 9 சதவீதமும், ஊடுருவல் (ஹேக்கிங்) தொடர்பான குற்றங்கள் 1.57 சதவீதமும் பங்கு வகிக்கின்றன என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து எஃப்சிஆர்எஃப் அமைப்பு இணைநிறுவனர் ஹர்ஷவர்தன் சிங் கூறுகையில், 'இந்தியாவில் உருமாறிவரும் இணையவழி குற்றங்களின் தன்மை குறித்து புலனாய்வு அமைப்புகள், தனிநபர்கள், வணிகங்கள் மற்றும் அரசு வட்டாரங்கள் புரிந்து கொள்வது மிகவும் முக்கியமானது.

நாட்டில் இணையவழி குற்றங்களின் பரவலை எடுத்துக்காட்டுவது மட்டுமல்லாமல் இந்த அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராடுவதற்கான கூட்டு முயற்சிகளின் அவசியத்தையும் இந்த ஆய்வு முடிவுகள் அடிகோடிட்டுக் காட்டுகிறது.

தொழில்நுட்பம் தொடர்ந்து முன்னேறிவருவதால், இணையவழி குற்றவாளிகளின் உத்திகளும் அதிகரித்து வருகின்றன, எனவே, அனைத்து தரப்பு மக்களும் இதுகுறித்து உரிய தகவலறிந்து விழிப்புடன் இருப்பது அவசியம்' என்றார்.

EVA STALIN